விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 249 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 09 வியாழக்கிழமை (25.08.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P. 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=


நல்லைக் கந்தனின் இரதோற்சவம் இன்று

கடன் சலுகை தொடர்பில்

## சீனா தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ள வேண்டும்

### ஜனாதிபதி ரணில் வலியுறுத்து



(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் ஊழியர் மட்டக்குழு இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் பின்னணியில், கடன் சலுகை தொடர்பில் சீனா அதன் தற்போதைய நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளவேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார். 11

இலங்கைக்கு நிதி உதவி வழங்க

## கடன் வழங்குனரிடமிருந்து உத்தரவாதம் தேவை

### சர்வதேச நாணய நிதியம் தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கைக்கு நிதி உதவிகளை வழங்கக் கடன் வழங்கும் தரப்பினரிடமிருந்து போதிய உத்தரவாதம் தேவை என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.**

இலங்கைக்கு வருகை தந்த சர்வதேச நாணய நிதியக் குழு நேற்றுக் கலந்துரையாடலை ஆரம்பித்துள்ளது. நிதியமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலில் மத்திய வங்கி அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இந்த பேச்சுவார்த்தையின் பின்னர் சர்வதேச நாணய நிதியத்துடன் அதிகாரிகள் மட்டத்திலான உடன்படிக்கையை எட்ட முடியும் என மத்திய வங்கியின் ஆளுநர் அண்மையில் தெரிவித்திருந்தார்.

இந் நிலையில், இலங்கைக்கு கடன் வழங்குவது தொடர்பில் சர்வதேச நாணயநிதியம் நேற்று முன்தினம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. குறித்த அறிக்கையில் இலங்கைக்கு நிதி உதவி வழங்க தேவையான உத்தரவாதம் தேவை என சுட்டிக்காட்டியுள்ளது. (ம)

## 3 இடங்களில் துப்பாக்கிச் சூடு

### இருவர் உயிரிழப்பு ஒருவர் காயம்

(கொழும்பு)

நாட்டின் மூன்று வெவ்வேறு இடங்களில் நேற்று மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் இருவர் உயிரிழந்துள்ளதுடன் ஒருவர் காயமடைந்துள்ளார். 11

## 50 ரூபாய்க்கு

### முட்டையை விற்க இணக்கம்



(கொழும்பு)

முட்டையொன்றை ஐம்பது ரூபா சில்லறை விலையில் விற்க முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் ஒப்புக்கொண்டுள்ளது.

வர்த்தக அமைச்சருடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இதற்கான இணக்கம் 11


அலங்காரக் கந்தனின் சப்பை இரதத் திருவிழா
(11 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை எதிர்கொண்டுள்ள நிதி நெருக்கடி தொடர்பில்

### சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி ரணில் கலந்துரையாடல்



(கொழும்பு)

இலங்கை எதிர்கொண்டுள்ள நிதி நெருக்கடிக்குத் தீர்வு வழங்குவதற்காக சர்வதேச நாணய நிதியத்துடனான ஆரம்ப கட்ட கலந்துரையாடல் ஒன்று ஜனாதிபதி ரணில் 11

## சர்வதேசத்துக்கு வழங்கிய வாக்குறுதி மீறப்பட்டுள்ளது

### பேராசிரியர் ஜி.எல். பீரிஸ்



(கொழும்பு)

சர்வதேசத்துக்கு வழங்கிய வாக்குறுதியை இலங்கை மீறியுள்ளதாக பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

புதிய சட்டம் கொண்டுவரப்படும் வரையில் தற்போதுள்ள பயங்கரவாதத் தடைச்சட்டத்தை 11

## அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்படாது

(கொழும்பு)

5 இலட்சம் ஹெக்டேயருக்கும் அதிகளவில் விவசாய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதால் இந்த வருட இறுதி வரையில் அரிசிக்கான தட்டுப்பாடு [illegible] 11

சீனாவிடமிருந்து

## உரமும் இல்லை பணமும் இல்லை

### விவசாய அமைச்சர் மகிந்த

(கொழும்பு)

சீன உர நிறுவனத்துக்கு செலுத்தப்பட்ட பணத்தை மீளப் பெறுவது தொடர்பான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக விவசாயத் 11

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# எதிர்ப்பை மௌனிக்கச் செய்யும் பயங்கரவாத தடைச்சட்டம்

## மாற்றுக் கொள்கைகளுக்கான மையம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

தமக்கான எதிர்ப்பை மௌனிக்க செய்யவே ஐக்கிய தேசியக் கட்சி - ஸ்ரீ லங்கா பொதுஜன கட்சி அரசாங்கம் பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்துகிறது என்று மாற்றுக் கொள்கைகளுக்கான மையம் குற்றம் சுமத்தியுள்ளது.

இதன் அடிப்படையிலேயே போராட்டத்தில் ஈடுபட்டவர்களை குறிவைத்து பயங்கரவாத தடைச்சட்டம் பயன்படுத்தப்படுகிறது என்று அந்த மையம் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பயங்கரவாதத் தடைச் சட்ட 9ஆவது பிரிவின் கீழ் வசந்த முதலிகே - ஹஷந்த ஜீவந்த குணதிலக்க மற்றும் சிறிதம்ம தேரர் ஆகியோரை 90 நாட்களுக்கு தடுத்து வைக்க விடுத்த உத்தரவு கண்டிக்கத்தக்கது.

இது ஜனாதிபதி பயங்கரவாத தடைச் சட்டத்தை நிர்வாகி துஷ்பிரயோகம் செய்ததற்கு மற்றொரு உதாரணம் என்று மாற்றுக்கொள்கைகளுக்கான மையம் சுட்டிக் காட்டியுள்ளது.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் 9ஆம் பிரிவு பாதுகாப்பு அமைச்சருக்கு 3 மாதங்கள்வரை காவலில்வைக்க உத்தரவுகளை வழங்குவதற்கான அதிகாரத்தை வழங்குகிறது.

இது ஒரு நேரத்தில் 3 மாதங்களுக்கு பின்னர் 12 மாதங்கள்வரை நீடிக்கப்படலாம்.

குற்றம் செய்ததாகச் சந்தேகிக்கப்படும் எந்தவொருவரையும் விசாரிக்க இலங்கையில் ஏராளமான சட்டங்கள் உள்ளன.

எனினும் போராட்டக்காரர்களை குறிவைத்து அவர்களின் செயல்களை பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு சமப்படுத்த பயங்கரவாத தடைச் சட்டத்தை பயன்படுத்துவது மிகவும் ஆபத்தானது என்றும் மாற்றுக்கொள்கைகளுக்கான மையம் தெரிவித்துள்ளது. (ம)

# வெளிநாடு செல்லும் அரச ஊழியர்கள்

## குறிப்பிட்ட தொகையை நாட்டுக்கு அனுப்ப வேண்டும்

(கொழும்பு)

சம்பளமில்லாத விடுமுறையில் வெளிநாடுகளுக்குச் செல்லும் அரச ஊழியர்கள், ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட தொகையை இலங்கைக்கு அனுப்புவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

நிதியமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையிலேயே இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள வங்கி அமைப்பின் மூலம்தமது பெயரில்உள்ள வெளிநாட்டு நாணயக் கணக்குக்கு பணத்தை அனுப்ப வேண்டும் எனவும் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வெளிநாடு செல்லும் ஊழியர்களில் முதன்மை மட்ட அதிகாரிகள் 100 அமெரிக்க டொலர்களும் இரண்டாம் நிலை அதிகாரிகளுக்கு 200 அமெரிக்க டொலர்களும் அனுப்ப வேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம)

# யாழ்.நகரில் வழிப்பறி இருவர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் வழிப்பறிக் கொள்ளை மற்றும் திருட்டுக்களில் ஈடுபட்ட இருவர் கோப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கோப்பாய் பொலிஸ் நிலைய புலனாய்வுப் பிரிவினரின் தகவலின் அடிப்படையில் அரியாலையைச் சேர்ந்த 22, 23 வயதுடைய இருவர் நேற்று கைது செய்யப்பட்டனர்.

நேற்று மாலை திருநெல்வேலி சந்தைக்கு பின்புறமாக பாடசாலை வீதியில் பெண் ஒருவரிடம் தங்கச் சங்கிலியை அபகரித்து தப்பித்த இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் இருவரும் அண்மையில் யாழ்ப்பாணம் நகரில் உள்ள தனியார் கல்வி நிலையத்தில் துவிச்சக்கரவண்டி திருட்டில் ஈடுபட்டமையும் கண்டறியப்பட்டுள்ளது.

சந்தேகநபர்களினால் திருடப்பட்ட இரண்டு துவிச்சக்கரவண்டிகள் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர்களுக்கு பல்வேறு திருட்டு மற்றும் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய வழக்குகள் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளதுடன் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டு ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர். (ம-104)

# நாட்டில் இன்றும் 3 மணிநேர மின்வெட்டு

(கொழும்பு)

நாட்டில் இன்றைய தினமும் மூன்று மணித்தியாலங்கள் மின்வெட்டினை மேற்கொள்ள இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

அதன்படி, A B C D E F G H I J K L P Q R S T U V W ஆகிய வலயங்களுக்கு பகல் வேளையில் ஒரு மணித்தியாலம் மற்றும் 40 நிமிடங்களும் இரவு வேளையில் ஒரு மணித்தியாலம் மற்றும் 20 நிமிடங்களும்மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது. (ம)


# மரண அறிவித்தல்

## திருமதி செல்வராணி சிவசெல்வராசா



பிறப்பு 14.04.1948 இறப்பு 22.08.2022

சிங்கப்பூரினைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வராணி சிவசெல்வராசா அவர்கள் கடந்த 22.08.2022 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசுந்தரம் - பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற விசுவலிங்கம் - கமலாம்பிகை தம்பதிகளின் அன்பு மருமகளும் விசுவலிங்கம் சிவசெல்வராசாவின் பாசமிகு மனைவியும் நிசாந்தன், சிந்துசா ஆகியோரின் அன்புத் தாயாரும் கல்யாணி, தவராஜா ஆகியோரின் மாமியாரும் புஸ்பராணி, அருளானந்தம் காலஞ்சென்றவர்களான ஜீவானந்தம், தேவானந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.08.2022) வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோரியடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஈஸ்வரி வாசா
விஸ்வகுல ஒழுங்கை,
புலோலி வடக்கு, பருத்தித்துறை. (C-4790)

தகவல்:
குடும்பத்தினர்
தொ.பே: 077 923 3552



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

### வெளிவாரிப் பரீட்சைகள்
### வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறி

- முதலாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை - 2020 (பழைய பாடத்திட்டம் மீள்பரீட்சார்த்திகளுக்கானது)
- முதலாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை - 2020 (புதிய பாடத்திட்டம்)

மேற்படி பரீட்சைகளினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் எதிர்வரும் ஒக்ரோபர் மற்றும் நவம்பர் மாதமளவில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப்பரீட்சைக்கு தோற்றத் தகுதியான பரீட்சார்த்திகள் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்திலோ அல்லது www.codl.jfn.ac.lk எனும் இணையத்தள முகவரியிலோ விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்படி பரீட்சைகளுக்கான பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்வதற்கான இறுதித் திகதி 19.09.2022 (**திங்கட்கிழமை**) ஆகும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களினை திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் (காலை 08.30 மணி தொடக்கம் மாலை 04.15 மணி வரை) சமர்ப்பிக்கலாம் அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்ப விரும்புவோர் கீழ்த் தரப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

**பிரதிப் பதிவாளர்,**
**திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.**

மேலதிக விபரங்களைப் பெறவிரும்புவோர் **021-222-3612** என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

**பதிவாளர்**
**24.08.2022**

(C-4788)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு சிகரெட்டுக்களை விற்பனை செய்த நபர் கைது

(யாழ்ப்பாணம்)

வெளிநாட்டில் இருந்து சட்ட விரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட சிகரெட்டை காரைநகர்ப் பகுதியில் விற்பனை செய்த நபர் ஒருவரை பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபரிடம் இருந்து 1200 சிகரெட்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட நபரும் மீட்கப்பட்ட சிகரெட்டுகளையும் ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் ஒப்படைத்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளை ஊர்காவற்றுறை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி-33)

# போதையில் சாரத்தியம் இ.போ.ச. சாரதி கைது

(யாழ்ப்பாணம்)

மதுபோதையில் பயணிகள் பேருந்தை செலுத்திச் சென்ற இலங்கை போக்குவரத்து சபையின் சாரதி மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 7 மணியளவில் காரைநகர் நோக்கி பயணிகளை ஏற்றிக்கொண்டு பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்தினை செலுத்திய சாரதி மதுபோதையில் காணப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் மானிப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து ,மானிப்பாய் பொலிஸார் சண்டிலிப்பாய் கட்டுடை பகுதியில் குறித்த பேருந்தினை மறித்து சாரதியை பரிசோதித்துள்ளனர்.

அதன் போது சாரதி மதுபோதையில் இருந்ததை உறுதி செய்ததை அடுத்து அவரை கைது செய்தனர். அதேவேளை பிறிதொரு சாரதியை வரவழைத்து பேருந்தினை அனுப்பி வைத்தனர். (நி-33)

# நல்லூர் கந்தசுவாமி கோவிலின் சித்திரத்தேர் வெள்ளோட்டம்



(யாழ்ப்பாணம்)

சரித்திரப் புகழ்மிக்க யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி கோவிலின் புனருத்தாரணம் செய்யப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்டம் நேற்று புதன்கிழமை காலை 7 மணியளவில் இடம் பெற்றது.

பெருமளவான பக்தர்கள் புடைசூழ இந்த சித்திரத்தேர் வெள்ளோட்டம் இடம்பெற்றமை குறிப்பிடத்க்கது. (நி-33-104)

## தொடரும் பகிடிவதைகளால்

# ஒரு மாதத்தில் 21 மாணவர்களுக்கு வகுப்புத் தடை விதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் புதுமுக மாணவர்களை பகிடிவதைக்கு உட்படுத்தும் மூத்த மாணவர்களுக்கு எதிராக பல்கலைக்கழக நிர்வாகம் வகுப்புத்தடை விதித்து வருகின்றது.

கடந்த ஒரு மாத கால பகுதிக்குள் 19 கலைப்பீட மாணவர்கள் உள்ளிட்ட 21 பேருக்கு வகுப்பத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

வகுப்புத்தடை விதிக்கப்பட்டுள்ள மாணவர்கள் தடைக் காலத்தில் பல்கலைக்கழக வளாகத்தினுள்ளோ , மாணவர் விடுதிக்குள்ளோ உட்பிரவேசிக்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தொடரும் பகிடிவதை சம்பவங்கள் தொடர்பாக பல்கலைக்கழக நிர்வாகத்தினரால் பூர்வாங்க விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (நி-33)

# காற்றாலை மின் செயற்றிட்டத்திற்கு எதிராக பேசாலையில் மக்கள் போராட்டம்

(மன்னார்)

மன்னார் மரவட்டத்தில் தொடர்ச்சியாக கனிய மண் அகழ்வு மற்று ஆய்வுப்பணிகள் சட்டவிரோதமாக இடம்பெறுவதாகவும் அதே நேரம் மீன் வளம் மற்றும் கடல் வளங்களை அழிக்கும் காற்றாலை மின்செயற்றிட்டத்தை மன்னார் தீவக பகுதிக்குள் மேற்கொள்ள வேண்டாம் என கோரி பேசாலை மக்கள் நேற்று புதன்கிழமை பேசாலை நகர்ப்பகுதியில் கண்டனப் போராட்டம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்

குறித்த போராட்டத்தில் எங்கள் வருங்காலத்தை தடைசெய்ய வேண்டாம் ,ஆர்பாட்டமே எங்கள் வாழ்க்கையா?, எங்கள் மாவட்டம் எங்களுக்கு வேண்டும்.தீர்மானமும் முடிவும் நீங்கள் மட்டும் தான நாங்கள் இல்லையா?,அமைதியாய் வாழ்கின்றோம் அகோரப்படுத்தாதீர்கள்.எங்கள் கடலில் மீன் வருவதில்லை காற்றாடி தான் காரணம் போன்ற பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மன்னார் பேசாலை பகுதியில் முழுவதும் கடைகள் மூடப்பட்டு ஆயிரக்கணக்கான மக்கள் குறித்த போராட்டத்தில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (நி-285)

## காரைநகர் பிரதேசசபையின் புதிய தவிசாளராக பாலச்சந்திரன் தெரிவு

(குப்பிழான்)

காரைநகர் பிரதேச சபையின் புதிய தவிசாளராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் க.பாலச்சந்திரன் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தவிசாளராக இருந்த சுயேட்சைக் குழு உறுப்பினர் மயிலன் அப்பாத்துரை தனது பதவியை இராஜினாமா செய்ததால் தவிசாளர் பதவி வெற்றிடமாக இருந்தது.

புதிய தவிசாளர் தெரிவு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மேற்படி பிரதேச சபையின் சபா மண்டபத்தில் வட மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் நிரஞ்சன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஈழுமக்கள் ஜன நாயகக் கட்சி ஆகிய இரு கட்சிகளினதும் தலா இரு உறுப்பினர்கள் சபைக்குச் சமூகமளிக்கவில்லை.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மூன்று உறுப்பினர்களும் சுயேட்சைக் குழுவைச் சேர்ந்த மூன்று உறுப்பினர்களும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் ஒரு உறுப்பினராக 7 உறுப்பினர்கள் சபைக்குச் சமூகமளித்தனர்.

தவிசாளர் தெரிவு ஆரம்பமான போது கூட்டமைப்பின் உறுப் பினர் விஜயராசா, சக உறுப்பினர் க. பாலச்சந்திரனைத் தவிசாளராக முன்மொழிந்தார். அவருக்கு எதிராக வேறு பெயர்கள் பிரேரிக்கப்படாமையால் பாலச்சந்திரன் போட்டியின்றி ஏகமனதாகத் தவிசாளராகத் தெரிவானார். (நி-18)

# மனதை கொள்ளை கொள்ளும் நல்லூர் மணல் சிற்பங்கள்



(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி கோவிலின் வருடாந்த மஹோற்சவம் நடை பெற்று வருகின்ற நிலையில் ஆலய முன்றலில் ஒவ்வொரு நாளும் உருவாக்கப்பட்டு வரும் மணல் சிற்பங்கள் அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

யாழ்ப்பாணம் வேலணையைச் சேர்ந்த சுப்பிரமணியம் சுகுமார் என்பவரால் இந்த மணல் சிற்பங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. கடந்த காலங்களில் இடம்பெற்ற நல்லூர் மஹோற்சவங்களின் போதும் இவர் மணல் சிற்பங்களை வடிவமைத்தமை குறிப்பிடத்தக்கது. (நி)


உங்கள் இல்லங்களில் இருந்தவாறே வலம்புரியில் விளம்பரம் செய்யும் வாய்ப்பு

**அன்பு வாசகர்களே!**

உங்கள் வீட்டில் இடம்பெறும் நிகழ்வுகள் மற்றும் வர்த்தக விளம்பரங்களை எவரின் உதவியுமின்றி உங்கள் வலம்புரியில் நேரடியாகப் பிரசுரிக்க முடியும்.

**தொடர்புகளுக்கு:**

தொலைபேசி:
076 097 3127
021 221 7603
Viber: 076 636 3378
E.mail:
valampurii@yahoo.com



# கண்ணீர் அஞ்சலி

அமரர். பராபரம் செல்வராணி




எமது பாடசாலையின் விஞ்ஞான ஆய்வுகூட உதவியாளர் திரு.ப.சுதாகரன் அவர்களின் அன்புத் தாயார் **அமரர்.பராபரம் செல்வராணி** அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்
யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம். (12542)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரதமே லேறி இனிதருள் புரியும் நல்லை கந்தனே நல்லை சண்முகனே நாடு நலம் பெற திருப்புகழ் ஓதுவோம் வடம் பிடிப்போம் குமாரகோபுரம் தரிசிப்போம்



"மகமாயை களைந்திட வல்லபிரான்
முகமாறும் ஒழிந்தும் ஒழிந்திலனே,
அகமாடை மடந்தையர் என்று அயரும்
சகமாயை யுள் நின்று தயங்குவதே..."

*-கந்தர் அநுபூதி*

நாம் மாயையிலே தோன்றினோம் மாயையிலே ஒடுங்குகிறோம்.கந்தர் அநுபூதி பெற்றவர்கள் மாயையில்

ஒடுங்காமல் சிவத்தில் ஒடுங்கி விடுவார்கள். தினம் கந்தர் அநுபூதி ஓதுவோம்.

**அளவிலாத தமிழ்றிவால் உயர்ந்துள்ள சாமர்த்தியசாலியே போற்றி!**

**திரு அண்ணாமலைப்பதி கோபுரத்தில் விரும்பி வீற்றிருப்பவனே போற்றி!**

**வலிய மயிலை நடத்தி ஒட்டிளத்தின் பிரியம் வைத்தவனே போற்றி!**

**மென்மையான செயல்களைச் செய்த ஆறுமுக சுவாமி என்றும் தலைவனே போற்றி!**

**சிவபூமியாகிய இலங்கையில் ஓடி வந்த நிருத்த மூர்த்தியே நல்லூர் குமார கோபுர சண்முகனே போற்றி!**

**வலிமை அழிய வேலைச் செலுத்தின திருக்கரத்தாய் போற்றி!**

**பெருமை வாய்ந்த குறமாது அணையும் திருப்புயங்களை உடையவனே போற்றி!**

ஆலயத்தில் நாம் எமது எண்ணங்களும் செய்கைகளும் யாவும் கந்தப் பெருமானிலேயே ஒடுங்கியிருக்கட்டும் முருகா

**நல்லூர் குமாரன் றனைக் கண்கள் காண்க**
**செவி எந்தை புகழ் கேட்க வாய் கீர்த்தி பாட**
**கந்தன் திருத்தொண்டு கை செய்வதாக**
**கடையேன் அவன் தொண்டனின்றும் வாழ்வு சேர்க**

எனது கண்கள் கந்தவேளை தரிசித்தலிலும் காதுகள் எம் பெருமான் கீர்த்தனங்களைக் கேட்க நாவானது குமாரனது திவ்விய சரித்திரங்களைச் சொல்வதும் திருமுறை ஓதலிலும் கைகள் கந்தனை மனதால் பூஜித்தலும் சரீரம் பணிவிடைகளிலும் எண்ணங்கள் கடம்பன் முருகனிடம் ஒருங்கியிருக்கட்டும் "ஓம் நமசிவாய"

சிவபிரான் வணங்குகின்ற குமரன் ஆறுமுகத்தன் இனிமை பயக்கும் செவ்விய சொற்களை உடையவன் சரவண மடுவில் வந்த முதல்வன் தேவ சேனாதிபதி, நல்லூர் கந்தன் அடியேன் ஈடேறும் படி திருப்புகழ், கந்தர் அநுபூதி பாடி ஓதி தவவழியில் ஒழுகி நல்வழியில் சீர்பெறும் ஒரு பிடிப்பான முயற்சி எண்ணம் உதிக்க உன் திருவுளம் அருள்வாய் முருகா, குமரா, கந்தா, கடம்பா ஓம் நமசிவாய.

**கந்தர் அநுபூதி பெற் றுக்**
**கந்தர் அநுபூதி சொன்ன**
**எந்தையருள் நாடியிருக்கும் நாள் எந்நாளோ**
**அன்பு நெறியும் அருள் நெறியும் மதியாதேனை**



**நயந்து வந்தே இன்ப நெறியில் புகுத்திவிட்ட எந்தாய் நல்லைப் பதிக்கரசே**
**" ஓம் நம சிவாய"**



**க.கு.க.சிவபாலன்.(K.K.K)**

(சி-4787)

# டெஸ்ட் தரவரிசை ரபாடா முன்னேற்றம்



டெஸ்ட் கிரிக்கெட் பந்து வீச்சாளர்கள் பட்டியலை ஐ.சி.சி. நேற்று வெளியிட்டது. இந்த தரவரிசையில் தென் ஆபிரிக்க வேகப்பந்து வீச்சாளர் ரபாடா 2 இடங்கள் முன்னேறி உள்ளார்.

இங்கிலாந்து- தென் ஆபிரிக்கா அணிகளுக்கு இடையேயான டெஸ்ட் போட்டியில் தென் ஆபிரிக்கா அணி இன்னிங்ஸ் வெற்றி பெற்றது. இந்தப் போட்டியில் முதல் இன்னிங்ஸில் தென் ஆபிரிக்கா வேகப்பந்து வீச்சாளர் ரபாடா 5 விக்கெட்டுகளையும் 2 ஆவது இன்னிங்சில் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றி ஆட்டநாயகன் விருதை தட்டிச் சென்றார்.

இத்தொடரில் 7 விக்கெட்டுகளை வீழ்த்தியதன் மூலம் ரபாடா இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளர்களான பும்ரா-அப்ரிடி ஆகியோரை பின்னுக்குத் தள்ளி தரவரிசையில் 3 ஆவது இடத்தை பிடித்துள்ளார்.

ரபாடா 836 புள்ளிகளுடன் 3 ஆவ்து இடத்திலும் அப்ரிடி-பும்ரா 828 புள்ளிகளுடன் 4,5 ஆவது இடங்களிலும் உள்ளனர். முதல் இடத்தில் அவுஸ்திரேலிய அணியின் கப்டனும் வேகப்பந்து வீச்சாளருமான கம்மின்ஸ் தொடர்கிறார். (க)

## கண்ணீர் அஞ்சலி

நல்லூர் பிரதேச செயலகத்தில்
அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும்
திருமதி.ரா.யாழினி அவர்களின் பாசமிகு கணவர்

**சிவஞானசுந்தரம் ராஜ்குமார்**

அவர்கள் மறைவுற்றதால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (சி-4786)

உத்தியோகத்தர் நலன்புரிச்சங்கம்,
பிரதேச செயலகம், நல்லூர்.

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின்
ஆரம்பப்பிரிவு ஆசிரியை
திருமதி.கஜனி கஜேந்திரன்
அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி.செல்வராணி பராபரம்**

அவர்களின் மறைவிற்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



மண் மகிழ- 15.03.1945 கண்நெகிழ-22.08.2022

அதிபர், ஆசிரியர் மற்றும் கல்விசாரா ஊழியர் நலன்புரிச் சங்கம்
யா/இணுவில் மத்திய கல்லூரி. (12552)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லைக்கந்தனின் தேர்வடம் பிடித்தால் பிணிகள் யாவும் பறந்தோடும்



சரித்திரப் பிரசித்தி பெற்ற நல்லைக் கந்தனின் சுபகிருது வருடத்துக்குரிய தேர்த்திருவிழா இன்று வியாழக்கிழமை நடை பெறுகின்றது.

தமிழ்த் தெய்வமாம் முருகனுக்கு தமிழ் மக்கள் வதியும் இடமெல்லாம் கோயில்கள் எழுப்பப்பட்டு ள்ளன.

முருகனுக்கும் தமிழருக்கும் இடையிலு ள்ள தொடர்பு வரலாற்றுக்கும் அப்பாற்பட்டது எனலாம். யாழ்ப்பாணத்தில் நல்ல ஊராக சைவ அனுட்டான ங்களுக்கெல்லாம் ஒரு குன்றமாக விளங்குவது நல் லைப்பதி எனலாம்.

### "மஹோற்சவ சிறப்பு"

கொடியேற்றமானது ஆடி அமாவாசையிலிருந்து ஆறாவது நாள் ஆரம்பமாகின்றது. தொடர்ந்து இருபத்தைந்து நாட்கள் மிக விமர்சையாக நடைபெறும். பத்தாம் நாள் மஞ்சத் திருவிழாவும் பதினே ழாவது திருவிழா கார்த்திகை உற்சவமும் பத்தொ ன்பதாவது திருவிழா கைலாச வாகனத் திரு விழாவும் இருபத் திரண்டாவது திருவிழா தண்டாயுதபாணி உற்சவமும் (மாம்பழத் திரு விழா) இருபத்து மூன்றாவது திருவிழா சப்பரத் திருவிழாவும் இருபத்து நான்காம் நாள் திருவிழா தேர்த்திருவிழாவும் இருபத்தைந்தாம் நாள் திருவிழா தீர்த்தோற்சவமும் இருபத்தாறாவது நாள் பூங்காவனத் திருவிழாவும் விசேடமாக நடைபெறும். இந்தத் திருவிழாக் காலங்களில் நல்லூர் பூலோக கைலாசமாக காட்சியளிக்கும்.

### "எந்த மயமும் கந்த மயம்"

நல்லூர் கந்தசுவாமி கோயிலில் திருவிழா ஆரம்பித்து விட்டால் அதன் அதிர்ச்சி யாழ்ப் பாணத்தில் மாத்திரமல்ல உலகம் முழுவதிலும் காணப்படு கின்றது. எந்த மயமும் கந்த மயமாகவே காட்சியளிக் கும். எல்லா ஊர்களிலும் சிறந்த நல்லூரில் எழுந்த ருளிய கந்தவேளின் மஹோற்சவங்கள் நடைபெறும். இருபத்தைந்து தினங்களும் தினந்தோறும் விரதம் அனுஷ் டித்து திருக்கோயிலுக்குச் சென்று வலம் வந்து திருவிழாவில் பங்கு பற்றி முருகன் அருள் பெற்று வீடு திரும்பும் பக்தர்களின் தொகை அளவிட முடியாது.

### 'அவனருளாலே அவன்தாள் வணங்குவோம்'

முருகனே, மாயோன் மருகனே, நருகை முகன் தம்பியே உன் திருச் சந்நிதியில் வந்து நின்றாலே பெரியார், சிறியார், இளைஞர், முதியோர், கற்றார், கல்லார், வறியவர், செல்வர், நல்லோர், தீயோர், அதிகாரி, அடிமை என்ற பேதம் ஒழிந்து யாவரும் முருகன் அடியார் என்ற உணர்ச்சி ஊற்றெடுக்கத் தம்மை மறந்து காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கித் துதிக்கின் றனர்.

எங்கு பார்த்தாலும் முருகப் பெருமானைப் போற்றும் நினைவு முதிர்ச்சியால் அனைத்திலும் முருகனின் பாடல்களே ஒலிக்கின்றன. அவன் ஒரு பெரும் நம்பிக்கையால் நாளும் அவனை வழிபட்டு வாழ்கின்றார்கள்.

இத்தகு வரலாற்றுச் சிறப்புக்களைத் தன்ன கத்தே கொண்டு விளங்கும் நல்லூர்க் கந்த சுவாமி கோயில் சைவப் பெருமக்களின் தனித் துவமான பக்தியின் கருவூலமாகத் திகழ்கி ன்றதென்றால் வியப்பில்லை.

இன்றைய தினம் நடைபெறும் இரதோற் சவ சவத்தில் கந்தன் தேர்வடம் பிடித்து அவன் தாள் எமது பிணிகளை நீக்கிக் கொள்வோ மாக.

**நல்லைக் கந்தனுக்கு அரோகரா!**

**மதுரகவி.காரை,**
**எம்.பி.அருளானந்தன்**

## அவனிதனில் அரவணைப்பான்!

முத் தமிழின் முத்தாக
முகிழ்ந்தொளிரும் முருக வள்ளல்
சத்தாக எமை யாண்டு
சகதி தனைச் சங்கரிப்பான்!

வித்தாக இருந் தென்றும்
வீறுடனே-ஏற வைப்பான்
நித்திலமும் ஒளி யுமிழ்ந்து
நீளுவகைத் தாங் கிடுவான்!

காலத்தா லழி யாத
கந்த வள்ள வாசியினால்
ஞாலமே என் றென்றும்
நல் வழியில் பயணிக்கும்!

தூக்கி நிறுத் திடுவான்!
துகள் களையே துடைத் தெறிவான்!
ஆக்க மளித் தென்றும்
அவனி யையே அரவணைப்பான்!

**செல்வன்.த.விதுரன், சுவிஸ்லாந்து.**

## பூதலத்துக்கீந்திடையா!

த்த்தித் தவழ்ந்து வந்து
தாய்மடியி லேறி நின்று
நித்தம் மகிழ் வீயும்
நீ ளுலகின் நித்திலமே
பித்துப் பிடித் துன்மேல்
பேயா யலைகின்றோம்
புத்தம் புது வாழ்வைப்
பூதலத்து கீந் திடையா!

காலை கதி ரொளியாய்
காலமெலாம் காத் தெம்மை
சீலம் சிறந் தொளிர்ந்து
சிறுமை சிதைந் தழிந்து
கோலம் கொழுந்து விட (க்)
கொழு கொழுகொம்பாய் நீயிருந்து
ஞாலம் நனி சிறக்க
நல்வழியைக் காட் டிடையா!

**கூத்தாடி வி.சி.குஞ்சிதபாதம்.**

## மனம் வையடா நல்லூர் மயுரேசா

என் அப்பனே என் ஐயனே
நல்லைக் கந்தப்பனே
எந்தன் கவித் தெய்வமே
என் வாழ்வின் ஒளித் தெய்வமே
என்றும் மனம் வையடா
நல்லூர் மயுரேசா

**சரவணபவன் செல்வரதி, பிளவத்தை.**




-கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ்-

## தேன் தமிழைக் காத்தளித்த பெருமாளே

ஊர் முழுதும் ஒன்றி வர ஓடுகிற தேரதனில்
ஒப்பரிய ஆறுமுகன் உவந்து ஏற
நீறு பொலி நெற்றியுடன் நெஞ்சுருகக் கந்தனவன்
நீள் கழல்கள் நினைவிருத்திக்களிகூர
பார் முழுதும் கேட்டிடவே பக்தியுடன் தமை மறந்து
பண் அதனில் இயல் கலந்து பரிமாறி
ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம்
ஆறுமுகம் ஆறுமுகம் என்று ஓதும்
வீறுடைய நல்லையதும் விண்ணகராம் என மயங்கி
வேல் பிடித்த கந்தனவன் தனை நாடி
மாறுபட தேவரெலாம் மகிழ்வுடனே ஓடிவர
மண்ணதனை விண்ணாக்கும் வடிவேலன்
சூருடைய மார்பிளந்து சொல்லரிய புகழ் வளர்த்தோன்
தூ மடந்தை இருவருமே துணை சேர
தேரதனில் அன்பரெலாம் தேம்பி அழ வரும் அழகன்
தேன் தமிழைக் காத்தளித்த பெருமாளே!

## வந்துஅருள் புரிவன் நல்லைவடிவேலன்

முந்துஅருள் முறுவல் கூட
சிந்துஅணிமணிகள் சேர
வந்துஅருள் புரிவன் நல்லை - வடிவேலன்

பந்தம் உறஅடியார் தங்கள்
முந்துதுயர் முழுதும் தீர
வந்துபுகும் நல்லூர் தன்னில் - வளம்சேர

பொங்கும் மணியோசைதன்னில்
பங்கம் உறும்தீமைஎல்லாம்
எங்கும் ஒளிவீசும் நல்லை - வடிவேலும்

கந்தவடிவேலன். தன்னின்
முந்துகிறவேலைக் கண்டு
சிந்தைமகிழ் அன்பர் எல்லாம் - துயர் தீர

கந்தனவன் தனிவேலோடும்
வந்துஅருள் இரு மாதோடும்
சந்தமிகு தமிழை நாடி - வருவானாம்

வெள்ளம் எனஅடியார் கூடி
உள்ளமதில் முருகோன் தன்னை
வெல்லுதமிழ் அதனால் போற்றிப் - பொழிவார்கள்

நல்லை இது அல்லதெய்வர்
நாடெனவேதேவர் போற்றும்
சொல்லரியவேலன் தன்னின் - திருஊரும்

முந்துதமிழ் அதனால் யாரும்
முருகனவன் தனையே தூற்றி
சொல்லிடினும் அருளேசெய்யும் - பெருமாளே.

## அன்பர் தேடும் பெருமாளே

கந்தவேள் தன்னைநாடிநாடி
கைகள் தலையேறத்தேடித் தேடி
வந்துகுவிவோர்கள் கோடிகோடி - அருளாளே

எந்தைமுருகோனும் தேரில் ஏறி
எங்கும் அடியார்கள் இதயம்ஊறி
கந்தமுருகேச!என்றே கூறி - களிகூர

எங்கும் ஒளிவீச ஆட ஆட
நல்லைமுருகேசன் தேரைநாட
வந்துரதம் ஏறஅன்பர் கூட - அழுவார்கள்

துள்ளுவடிவேல்மாதர் தாமும்
நல்லஅடியார்கள் கண்கள் தோய
தெள்ளுதமிழ் பாடதேரில் ஏறி - வருவார்கள்

வந்துரதம் ஏறவேலன் தானும்
முந்தும் அடியார்கள் முன்னே கூடி
சிந்தைகளிகூரகந்தன் நாமம் - பொழிவார்கள்

மெல்லரதமாடமின்னும் கந்தன்
தங்கஒளிவீசித் தேரில் நின்று
பொங்கும் அருளீந்துஅன்பர் தம்மை -கவர்வானாம்

பங்கம் அதுதீரபாரில் தேரும்
வங்கம் எனநின்றஅடியார் காண
தங்குதடையின்றிஊர்ந்தேவீதி - தனில் ஓடும்

நல்லைவடிவேலன் பாதம் நாடி
தொல்லைஅதுதீரகீதம் பாடி
வெள்ளைமனதோடுஅன்பர் தேடும் - பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்



## அம்புலிமாமா

### இரு சகோதரிகள்

(நேற்றைய தொடர்ச்சி)

பின்புறம் கிணறு தோண்டும் போது கிடைத்தது. அது பார்க்க அழகாக இருந்தது. பலர் அதை விலைக்கு வாங்கிக் கொள்ள முன் வந்தார்கள். ஆனால் உமா அதை விற்க இசையவில்லை. அதனால் அந்த விக்கிரகத்தைக் காண தினமும் பலர் உமாவின் வீட்டிற்கு வந்தார்கள். இதனால் உமாவுக்கு மிகவும் சந்தோஷம் என எண்ணி லட்சுமி பொறாமை கொண்டாள்.

நான்கு நாட்கள் இருந்து விட்டு தம் ஊருக்குப் புறப்படுகையில் லட்சுமியும் அவள் கணவனும் உமாவையும் அவன் கணவனையும் தம் ஊருக்கு வரும்படி அழைத்தார்கள். உமாவும் "வருகிறோம். ஆனால் இப்போதல்ல உனக்கு என் பரிசாக ஏதாவது கொடுக்க வேண்டுமே. உன் அந்தஸ்திற்கு ஏற்ப கொடுக்கும் சக்தி எனக்கு இல்லை. அதனால் நீ என்னிடமுள்ள பொருள்களில் எதை வேண்டுமானாலும் கேள் கொடுக்கிறேன்" என்றாள்.

லட்சுமி உடனே "நீ வைத்திக்கும் விக்கிரகத்தைக் கொடு" எனவே உமாவும் அதை அவளுக்குக் கொடுத்துவிட்டாள். ஊர் போய்ச் சேர்ந்ததும் லட்சுமியின் கணவன் அவளிடம் நீ ஏன் விக்கிரகத்தை உமாவிடம் கேட்டு வாங்கிக் கொண்டாய்? இப்படிக் கொடுத்து உமா பெருமை அடைந்து விட்டாளே" என்றான்.

அதற்கு லட்சுமி "என்னிடம் உள்ளது போல ஒரு பொருள் இன்னொருவரிடம் இருக்கக்கூடாது. இந்த விக்கிரகம் இப்போது என் ஒருத்தியிடம் தான் இருக்கிறது. வேறு யாரிடமும் இல்லை. இதை நான் உமாவிடம் இருந்து பெற்றது கூட வேறு யாருக்கும் தெரியாது. எனவே எனக்குத் தான் இதனால் பெருமை" என்றாள்.



சில நாட்களுக்குப் பின் உமாவும் அவள் கணவனும் லட்சுமியின் வீட்டிற்கு வந்தார்கள். அவர்களுக்கு தன்னிடமுள்ள பொருட்களை எல்லாம் காட்டி லட்சுமி பெருமை அடித்துக் கொண்டாள். உமாவோ தன் தங்கை வசதியாக வாழ்வது கண்டு மகிழ்ந்தாள்.

உமா தன் ஊருக்குக் கிளம்பும் நாள் வந்தது. அன்று ஒரு வியாபாரி வந்து லட்சுமியின் கணவனிடம் "என்னிடம் இரு அபூர்வ முத்துக்கள் உள்ளன. ஒவ்வொன்றும் பத்தாயிரம் வராகன்கள் விலையாகும். ஒன்றை நீங்கள் வாங்கிக் கொண்டால் மற்றதை நம் மன்னருக்கு விற்று விடுகிறேன்" என்றான். லட்சுமி அவற்றைப் பார்த்து விட்டு "இம் மாதிரி முத்துக்கள் வேறெங்கும் இல்லையென்றால் இரண்டையும் நானே வாங்கிக்கொள்கிறேன். என்னிடம் உள்ள முத்தைப் போல இன்னொருவரிடம் இருக்கக்கூடாது" என்றாள். வியாபாரியும் முத்துக்களைக் கொடுத்து விட்டுப் பணத்தை வாங்கிக் கொண்டு போனான்.

லட்சுமி ஒரு மட்ட ரகமான புடவையை வாங்கி உமாவுக்குக் கொடுத்து அவளை ஊருக்கு அனுப்பினாள். அதற்குப்பின் லட்சுமி தான் உமாவை விட சந்தோஷமாக இருப்பதாக எண்ணி சந்தோஷப் பட்டுக் கொண்டாள்.

அவள் தனக்கு மிஞ்சி யாரும் இல்லை என்று எண்ணி வேலை எதுவும் செய்யாமல் சாப்பிட்டுப் படுத்துத் தூங்கியதால் அவள் உடம்பு மிகவும் பருத்து விட்டது. அதனால் அவள் அழகு குறைந்தது.

(தொடரும்)

# சிலப்பதிகாரம்

## நடந்தாழ் வாழி கண்ணகி




தாங்கமுடியாத கஷ்டங்கள் வரும்போது தற்கொலை செய்து கொள்கிற மூடர்களுக்கு கவுந்தி அடிகள் சொன்னது சிறந்த வழி காட்டல் கஷ்டங்கள் வாழ்க்கையின் ஒரு பகுதி அதைக் கடக்காமல் வாழ்க்கையை வாழ்ந்து முடிக்க முடியாது.

எல்லாமே சுகங்களாக மட்டுமே இருந்தாலும் வாழ்க்கை அலுத்துத் தான் போகும் என்பது கஷ்டங்களைச் சந்திக்கிறவர்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. கஷ்டங்களும் சுகங்களும் இரவும் பகலும் போல. கஷ்டங்களைக் கடப்பதற்கான தைரியமும் பலமும் தானே நமக்குத் தேவை?

மூவரும் அருகப் பெருமானை வழிபட்டார்கள். தொடர்ந்து நடந்தார்கள்.

சிறிது நேரம் கழித்து அவர்கள் உறையூரை அடைந்தார்கள். அப்போது நன்றாக இருட்டி விட்டது. விடுதி ஒன்று சிறிது தூரத்தில் தெரிந்தது.

நன்றாக இருட்டிவிட்டது. அதோ தூரத்தில் விளக்குகள் தெரிகின்றனவே அவை சாரணர்கள் தங்கும் வி[illegible]மைப் பிரியமாக [illegible] வேற்று இரவு தங்குவதற்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுப்பார்கள் என்றார் கவுந்தி அடிகள்.

"அது எப்படி இங்கிருந்தே அது சாரணர் தங்கும் விடுதி என்று சொல்கிறீர்கள்? நீங்கள் இங்கே முன்னாலேயே வந்திருக்கிறீர்களா?" ஆச்சரியத்துடன் கேட்டாள் கண்ணகி.

"அசோக மரங்கள் சூழ்ந்த இனிமையான குடில்கள் சாரணர்கள் தங்கும் இடங்கள். அவைகளைத் தூரத்தில் இருந்தே அடையாளம் காண முடியும்" என்று சிரித்தார் அடிகள்.

அவர் சொன்னது போலவே அது சாரணர் விடுதிதான் அன்று இரவு அவர்கள் அங்கேயே தங்கினார்கள்.

சாரணர்கள் நாடெங்கும் போய் மக்களுக்கச் சொல்லுகிற உபதேச மொழிகளைச் சொல்லிக் கொண்டிருந்தார் கவுந்தி அடிகள். அதைக் கேட்டபடி நடந்த களைப்பில் கண்ணகியும் கோவலனும் தூங்கிப் போனார்கள்.

மறுநாள் விடியலில் எல்லோரும் எழுந்து விட்டார்கள் பயணத்தை தொடர்ந்தார்கள். தெற்குத் திசை என்கிற பொதுவான எண்ணத்தில் போய்க் கொண்டிருந்தார்களே தவிர மதுரைக்குப் போகும் சரியான வழி மூவருக்குமே தெரியாது. அதனால் அவ்வப்போது எதிர்ப்படுகிறவர்களை வழி கேட்டுக் கொள்ள வேண்டியிருந்தது.

அப்படிக் கேட்பதும் கூட எல்லோரிடமும் கேட்டுவிட முடியாது. நெடுந்தூரம் நடந்து பயணம் செய்கிறவர்களாகப் பார்த்தே கேட்க வேண்டி இருந்தது. இல்லாவிட்டால் தவறான வழியில் சென்று விடுகிற ஆபத்து அதிகம். அன்றைக்கு நெடுநேரம் நடந்தும் யாரும் கண்ணில் படவில்லை. ஏறக்குறைய நண்பகல் ஆகி விட்டது. என்ன செய்வது? தொடர்ந்து நடக்கலாமா? வேண்டாமா?

அப்போது தூரத்தில் ஒருவர் வருவது தெரிந்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை



கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 59

குறிப்பிட்டபடி உக்ரைனில் உக்ரைனிய தேர்தல் சட்டத்தின்படி தேர்தல் செல்லுபடியாகும் வகையில் தேவைப்படும் 50% பங்கேற்பை வாக்களிப்பு வீதம் எளிதில் தாண்டியது.

ஐந்து கட்சிகள் மொத்த வாக்குகளில் தேவையான 3% தேர்தல் வரம்பைப் பெற்று பாராளுமன்ற ஆசனங்களைப் பெற்றன. அவை பிராந்தியங்களின் கட்சி (PoR), யூலியா திமோஷென்கோ பிளாக் (BYuT), எமது உக்ரைன்-மக்கள் சுய பாதுகாப்பு (OU-PSD), உக்ரைன் கம்யூனிஸ்ட் கட்சி (CPU) மற்றும் பிளாக் லிட்வின் (BL) ஆகும்.

இத் தேர்தலின் வாக்களிக்க 37,588,040 பேர் தகுதி பெற்றிருந்தனர். அதில் 23,315,257 பேர் வாக்களித்தனர். செல்லுபடியற்ற வாக்குகள் 379,658 ஆகும். வாக்களிப்பு வீதம் 63.22% ஆகும். எல்லா வேட்பாளர்களுக்கும் எதிராக வாக்களித்தவர்கள் 637,185 ஆகும்.

பிராந்தியங்களின் கட்சி 8,013,895 (34.37%) வாக்குகளைப் பெற்று 175 ஆசனங்களைக் கைப்பற்றியது. யூலியா திமோஷென்கோ பிளாக் கட்சி 7,162,193 (30.72%) வாக்குகளைப் பெற்று 156 ஆசனங்களைக் கைப்பற்றியது.

எமது உக்ரைன் கட்சி 3,301,282 (14.16%) வாக்குகளைப் பெற்று 72 ஆசனங்களைக் கைப்பற்றியது. உக்ரைன் கம்யூனிஸ்ட் கட்சி 1,257,291 (5.39%) வாக்குகளைப் பெற்று 27 ஆசனங்களைக் கைப்பற்றியது. பிளாக் லிட்வின் கட்சி 924,538 (3.97%) வாக்குகளைப் பெற்று 20 ஆசனங்களைக் கைப்பற்றியது.

முதற்கட்ட தேர்தல் முடிவுகள் வெளியானதைத் தொடர்ந்து, கூட்டணி அமைப்பது குறித்து கட்சிகள் தங்கள் நிலைப்பாட்டை வெளிப்படுத்தின.

பிராந்தியங்களின் கட்சி தன்னைத் தேர்தலில் வெற்றி பெற்றதாக அறிவித்து, ஆளும் கூட்டணியை அமைப்பதற்கான பேச்சு வார்த்தைகளைத் தொடங்கியதாகக் கூறியதோடு, எதிர்க்கட்சியில் இருக்க வேண்டும் என்ற விருப்பத்தை அக் கட்சி தெரிவிக்கவில்லை.

**30 செப்டெம்பர் 2007 அன்று பாராளுமன்றத் தேர்தல்கள் நடைபெற்றன. உக்ரைனின் மத்திய தேர்தல் ஆணையத்தின்படி 63.22% பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் வாக்களித்திருந்தனர்.**

திமோஷென்கோவின் பிளாக் எங்கள் உக்ரைனுடன் ஒரு கூட்டணியை ஆதரித்தது மற்றும் லிட்வின்ஸ் பிளாக் உடனும் சேர எதிர்பார்த்தது. மேலும் யூலியா திமோஷென்கோ பிராந்தியங்களின் கட்சி அல்லது கம்யூனிஸ்டுகளுடன் எந்தவொரு கூட்டணிக்கும் கடுமையாக எதிராக இருந்தார். பிராந்தியங்களின் கட்சி அல்லது கம்யூனிஸ்டுகளுடன் கூட்டணி அமையும் பட்சத்தில் தனது கட்சி எதிர்க்கட்சியாக இருக்கும் என்று அவர் கூறினார். ஜனாதிபதி யுஷ்செங்கோ, கூட்டணிக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையே சிறந்த உறவின் அவசியத்தை வெளிப்படுத்தினார். பாராளுமன்றத்திலும் அரசாங்கத்திலும் எதிர்க்கட்சிகளுக்கு பதவிகளை வழங்குவதன் மூலம் இதை அடைய வேண்டும் என்று கூறினார்.

லிட்வின் கட்சி அனைத்து உயர்மட்டக் கட்சிகளிடமிருந்தும் ஒரு கூட்டணியை உருவாக்குவதற்கான முன்மொழிவுகளைப் பெற்றது. எதனுடன் கூட்டு சேர்வது என்பது பற்றி கட்சியின் மகாநாட்டில் முடிவெடுக்கப்படும் என அக்கட்சியின் தலைவர்கள் தெரிவித்தனர்.

உக்ரைனின் சோசலிஸ்ட் கட்சி (SPU) 2.86% வாக்குகளை மட்டுமே பெற்றது. இதனால் புதிய பாராளுமன்றத்தில் எந்தவொரு இடங்களையும் பெறவில்லை. சோசலிஸ்ட் கட்சி கூடுதலாக 0.14% வாக்குகளைப் பெற்றிருந்தால், மொத்த முடிவுகள் Bloc Lytvyn பிரதிநிதிகளின் சேர்க்கையுடன் முந்தைய (2006) உக்ரைனிய பாராளுமன்றத் தேர்தலைப் போலவே அதிகமாகவோ அல்லது குறைவாகவோ இருந்திருக்கும். உக்ரைனின் சோசலிஸ்ட் கட்சியின் தலைவரான ஒலெக்சாண்டர் மோரோஸ், ஒக்டோபர் 4, 2007 அன்று தனது தோல்வியை ஒப்புக் கொண்டார் மற்றும் திமோஷென்கோவின் பிரதமர் பதவிக்கான முயற்சியை ஆதரித்தார்.

யூலியா திமோஷென்கோ பிளாக் மற்றும் நமது உக்ரைன்-மக்கள் சுயபாதுகாப்பு பிளாக் கட்சிகளுக்கிடையே ஒரு கூட்டணி உருவானதைத் தொடர்ந்து யூலியா திமோஷென்கோ, 18 டிசெம்பர் 2007 அன்று பிரதம மந்திரியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். பிரதம மந்திரிக்கான அவரது வேட்பு மனு பாராளுமன்றத்தில் 226 பிரதிநிதிகளின் வாக்குகளால் ஆதரிக்கப்பட்டது.

உக்ரைனின் பாராளுமன்றம் அதன் அரசியலமைப்பு அமைப்பின் படி மூன்றில் இரண்டு பங்கிற்குக் குறையாமல் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களை கொண்டிருத்தல் வேண்டும். இதன் பொருள் இரண்டு பெரிய கட்சிகளில் ஏதேனும் ஒன்று மொத்தமாக இராஜினாமா செய்து அதனால் பாராளுமன்றத்தில் உறுப்பினர்களின் எண்ணிக்கை மூன்றில் இரண்டு பங்கிலும் குறைந்தால் பாராளுமன்றம் அதன் அதிகாரத்தை இழக்கும். அதன்படி புதிய தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும்.

(தொடரும்)

# அட்டகாசம் புரியும் கங்காருகள் பொல்லுகளுடன் நடமாடும் மக்கள்



(கன்பெரா)

அவுஸ்திரேலிய நகரமொன்றில் குடியிருப்புப் பகுதிகளுக்கு அருகில் கங்காருகள் புகுந்து மனிதர்களை தாக்குவதால், அந்நகரிலுள்ள மக்கள் பீதியடைந்துள்ளனர்.

குயின்ஸ்லாந்து மாநிலத்தின் மாரூம் எனும் சிறிய நகரில் அண்மைக்காலமாக கங்காருகளின் தாக்குதல் அதிகரித்துள்ளதாக அங்குள்ள மக்கள் தெரிவித்துள்ளனர்.

பூங்காக்கள் போன்ற இடங்களில் கங்காருகள் அதிக எண்ணிக்கையில் திரிகின்றன.

சிலவேளைகளில் மனிதர்களைக் கண்டால் அவர்களை கங்காருகள் தாக்குகின்றன.

அண்மையில், காங்காரு நடத்திய தாக்குதலில் 67 வயதான பெண்ணொருவரின் கால் முறிந்துள்ளது.

இந்நிலையில், மக்கள் மாலை வேளையில் நடைபயிற்சிக்கு செல்வதற்கோ மீன்பிடிக்கச் செல்வதற்கோ முடியாத நிலையில் உள்ளனராம்.

காங்காருகளின் தாக்குதல்களிலிருந்து தப்புவதற்காக உள்ளூர் மக்கள் பொல்லுகளை ஏந்தியவாறு நடமாடுகின்றனர்.

புற்களை உண்பதற்காக கங்காருகள் வருவதாகவும், வீட்டு வளாகத்திலுள்ள புற்களை முறையாக கத்திரித்து வைத்திருந்தால் குறைந்தளவு கங்காருகளே வருவதற்கான வாய்ப்பு உள்ளதாகவும் ஒருவர் தெரிவித்துள்ளார்.

## ஐரோப்பாவில்

# 500 ஆண்டுகளில் இல்லாத மிக மோசமான வறட்சி

ஐரோப்பாவின் பெரும் பகுதி கடந்த 500 ஆண்டுகளில் இல்லாத மோசமான வறட்சியை எதிர்கொண்டுள்ளது. பிராந்தியத்தின் மூன்றில் இரண்டு பங்கு ஒருவித வறட்சி எச்சரிக்கையின் கீழ் உள்ளன என உலக வறட்சி ஆய்வகத்தின் சமீபத்திய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மோசமாக வறண்ட கால நிலை பயிர் விளைச்சலை பெருமளவு பாதித்துள்ளது. அத்துடன், காட்டுத் தீயை தூண்டி வருகிறது.

ஐரோப்பாவின் சில பகுதிகளில் கடும் வறட்சி நிலை இன்னும் பல மாதங்கள் நீடிக்கும் என்று உலக வறட்சி ஆய்வகத்தின் சமீபத்திய அறிக்கையில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய வறட்சி குறைந்தபட்சம் 500 ஆண்டுகளுக்குப் பிறகு ஐரோப்பா எதிர்கொள்ளும் மோசமான நிலையாகத் தோன்றுகிறது எனவும் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

இத்தாலி, ஸ்பெயின், போர்த்துக்கல், பிரான்ஸ், ஜேர்மனி, நெதர்லாந்து, பெல்ஜியம், லக்சம்பர்க், ருமேனியா, ஹங்கேரி, வடக்கு செர்பியா, உக்ரைன், மால்டோவா, அயர்லாந்து, இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகளில் நிலைமை மோசமாகி வருவதாக அறிக்கை எச்சரித்துள்ளது. (நி)

# தவறான வானிலை முன்னறிவிப்பால் ஆய்வு மைய தலைவர்கள் பதவி நீக்கம்

## ஹங்கேரியில் சம்பவம்

(புடாபெஸ்ட்)

ஹங்கேரியில், தவறான வானிலை முன்னறிவிப்புக்களை வழங்கியதற்காக தேசிய வானிலை சேவையின் தலைவர்கள் உடனடியாக பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை புனித ஸ்டீபன் தினத்தை கொண்டாட ஹங்கேரியர்கள் தயாராகினர். புனித ஸ்டீபன் தினம் ஒரு தேசிய விடுமுறையாகக் கருதப்படுகிறது. மேலும் அன்றிரவு ஒரு கண்கவர் வானவேடிக்கை நடத்தப்படுகிறது.

அரசால் நடத்தப்படும், வருடாந்திர வானவேடிக்கை நிகழ்ச்சி ஹங்கேரியின் தனிச்சிறப்புகளில் ஒன்றாகும். அதைக் காண 20 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தலைநகரான புடாபெஸ்டில் குவிந்துள்ளனர். தலைநகர் புடாபெஸ்டில் 5 கிலோமீற்றர் தொலைவில் டான்யூப் ஆற்றங்கரையில் 240 இடங்களில் இரவில் விளக்கேற்றும் நோக்கில் 40,000 மலர்கள் தயார் செய்யப்பட்டன.

வானவேடிக்கைக்கு தயாரான நிலையில், ஹங்கேரிய தேசிய வானிலை ஆய்வு மையம், நகரில் பாரிய மழை பெய்யும் என்றும் பட்டாசு வெடிக்க முடியாது என்றும் முன்னறிவிப்புக்களை வெளியிட்டது. அதன்படி, பட்டாசு வெடிக்கும் நிகழ்ச்சி தயக்கத்துடன் இரத்து செய்யப்பட்டது. இதனால் பலர் அதிருப்தி அடைந்தனர்.

இருப்பினும், முன்னறிவிப்பை பொய்யாக்கும் வகையில், மழையுடன் கூடிய புயல் தலைநகரை கடந்து சென்றதால், தலைநகரில் மழை பெய்ய வில்லை என்று கூறப்படுகிறது. கிழக்கில் ஒரு சில பகுதிகளில் மட்டுமே மழை பெய்துள்ளதாகவும் ஹங்கேரிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. தேசிய வானிலை ஆய்வு மையத்தால் துல்லியமான வானிலை முன்னறிவிப்புக்களைச் செய்ய முடியவில்லை என்று ஹங்கேரி மக்களிடையே எதிர்ப்புகளும் அதிருப்தியும் எழுந்தன. தேசிய வானிலை சேவையின் தலைவர்கள் சமூக ஊடகங்களில் பொதுமக்களிடம் மன்னிப்புக் கோரினர்.

ஆனால் புத்தாக்க அமைச்சர் லாஸ்லோ பால்கோவிச், தேசிய வானிலை ஆய்வு மைய தலைவர்களை பதவி நீக்கநடவடிக்கை எடுத்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவணி மாத இராசி பலன்கள்

## 17.08.2022 - 17.09.2022

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

## தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும்!



**நினைத்ததை நினைத்தபடி செய்து முடிக்க வேண்டும் என்று சொல்லும் மிதுன இராசி வாசகர்களே!**

ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் புதன் சகாயஸ்தானத்தில் சூரியனோடு இணைந்து சஞ்சரிக்கிறார். அஷ்டமத்துச் சனி வக்கிரத்தில் இருப்பதால் பொருளாதாரம் திருப்தி தரும்.

**சிம்ம - சூரியன் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 3 ஆம் இடத்திற்கு அதிபதி சூரியன். இவர் மாதம் முழுவதும் அங்கேயே சஞ்சரிக்கிறார். எனவே தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொல்லை தந்தவர்கள் விலகுவர். தொழில், உத்தியோகம் சம்பந்தமாக எடுத்த முயற்சியில் அனுகூலம் கிடைக்கும். புதிய பொறுப்புகள் கிடைக்கும். உத்தியோகத்தில் வேலைப் பளு குறையும். தொழிலில் பணியாளர்கள் இணைந்து செயற்படுவர்.

**கன்னி - புதன் சஞ்சாரம்**

ஆவணி 8 ஆம் திகதி, கன்னி இராசிக்குச் செல்லும் புதன், அங்கு உச்சம் பெறுகிறார். உங்கள் இராசி அதிபதி உச்சம் பெறுவது யோகம் தான். ஆரோக்கியம் சீராகும். வாகன மாற்றம் செய்ய உகந்த நேரம் இது. கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள். உத்தியோகத்தில் கேட்ட சலுகைகள் கிடைக்கும்.

**வக்கிர புதன் சஞ்சாரம்**

ஆவணி 12 ஆம் திகதி, சிம்ம இராசிக்கு புதன் வக்கிர இயக்கத்தில் செல்கிறார். உங்கள் இராசிக்கும், 4 ஆம் இடத்திற்கும் அதிபதியானவர் புதன். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் வக்கிரம் பெறுவது யோகம்தான். இக்காலத்தில் இடமாற்றம், வீடு மாற்றம் திருப்தி அளிக்கும். புதிய முயற்சிகளில் வெற்றி உண்டு. இந்த காலகட்டத்தில் கூடுதல் விழிப்புணர்ச்சி தேவை. ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது நல்லது.

**சிம்ம - சுக்கிரன் சஞ்சாரம்**

ஆவணி 16 ஆம் திகதி, சிம்ம இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 5, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் சகாய




ஸ்தானத்திற்கு வரும்போது, பிள்ளைகள் வழியில் சுபவிரயம் ஏற்படும். பூர்வீக சொத்துக்களை பிரித்துக்கொள்வதில் இருந்த தடைகள் மாறும். வீட்டிற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை வாங்க முன்வருவீர்கள்.

**குரு வக்கிரமும், சனி வக்கிரமும்**

மாதம் முழுவதும் குருவும், சனியும் வக்கிர இயக்கத்தில் இருக்கிறார்கள். உங்கள் இராசிக்கு 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான குரு வக்கிரம் பெறும்போது, நற்பலன்கள் கிடைக்கும். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் என்பதால், எண்ணங்கள் நிறைவேறும். உங்கள் இராசிக்கு 8, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சனி வக்கிரம் பெறுகையில், ஒரு சில நன்மைகளைச் செய்தாலும், உறவினர் வழியில் பிரச்சினைகளை உருவாக்கும். ஆரோக்கியம் சீராக இருந்தாலும் நிம்மதி குறைவாக இருக்கும். இந்த மாதம் வியாழக்கிழமை தோறும் குருபகவானை வழிபட்டால் நன்மைகள் அதிகம் பெறலாம்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம் மாதம் அஷ்டமத்து சனி வக்கிரம் பெற்றிருப்பதால் ஆரோக் கியம் சீராகும். ஆதாயம் தரும் தகவல்கள் நிறைய கிடைக்கும். கணவன் - மனைவிக்குள் பிணக்கு ஏற்படாமல் இருக்க விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள். சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு. பிள்ளைகள் வழியில் சுபகாரியங்கள் எதிர்பார்த்தபடி நடைபெறும். பணிபுரியும் பெண்களுக்கு கேட்ட சலுகைகள் கிடைக்கும். அரசுப் பணிக்கு முயற்சித்தவர்களுக்கு அது கைகூடும்.

## உத்தியோகத்தில் உங்கள் எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும்!



**புகழ்பெற்ற மனிதர்களாக பூமியில் வாழ விரும்பும் கடக இராசி வாசர்களே!**

ஆவணி மாதக்கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, தன ஸ்தானத்தில் தனாதிபதி சூரியனும், விரயாதிபதி புதனும் இணைந்திருப்பதால் வரவும், செலவும் சமமாகும். குரு பார்வை இருப்பதால் காரியங்கள் கடைசி நேரத்தில் கைகூடி விடும்.

**சிம்ம - சூரியன் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 2 ஆம் இடத்திற்கு அதிபதியான சூரியன், இந்த மாதம் முழுவதும் அதே இடத்திலேயே சஞ்சரிக்கிறார், எனவே தன ஸ்தானம் வலுப்பெற்று, பணத் தேவை பூர்த்தியாகும். திட்டமிட்ட காரியத்தை திட்டமிட்டபடியே நடத்தி வைப்பீர்கள். அரசு வேலை கிடைக்க வாய்ப்புண்டு. கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள்.

**கன்னி - புதன் சஞ்சாரம்**

ஆவணி 8 ஆம் திகதி, கன்னி இராசிக்குச் செல்லும் புதன் அங்கு உச்சம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு சகாய ஸ்தானாதிபதியாகவும் புதன் விளங்குவதால், சில நன்மைகளும் நடைபெறும். சுபவிரயங்கள் அதிகரிக்கும். பூர்வீக சொத்துக்களில் இருந்த வில்லங்கங்கள் விலகும். உத்தியோகத்தில் உங்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

**வக்கிர புதன் சஞ்சாரம்**

ஆவணி 12 ஆம் திகதி, சிம்ம இராசிக்கு புதன் வக்கிர இயக்கத்தில் செல்கிறார். இதன் விளைவாக "புதஆதித்ய யோகம்" செயல்படும். விரயாதிபதி புதன் வக்கிரம் பெறுவது நன்மை தான். என்றாலும் சகாய ஸ்தானத்திற்கும் அதிபதியாக புதன் விளங்குவதால் சில தடைகளும், தாமதங்க[illegible] ஒரு சிலருக்கு ம[illegible] அதிகரிக்கும். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டிய நேரம் இது.

**சிம்ம - சுக்கிரன் சஞ்சாரம்**

ஆவணி 16 ஆம் திகதி, சிம்ம இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 4, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன், தன ஸ்தானத்திற்கு வரும் போது அசையாச் சொத்து வாங்குவதில் ஆர்வம்




காட்டுவீர்கள். தாய்வழி ஆதரவு கிடைக்கும். உத்தியோகத்தில் உயர் நிலையை அடைய சந்தர்ப்பங்கள் கைகூடி வரும். வீட்டிற்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். சுபகாரியங்கள் நடைபெறுவதற்கான அறிகுறி தென்படும்.

**குரு வக்கிரமும், சனி வக்கிரமும்**

மாதம் முழுவதும் குருவும், சனியும் வக்கிர இயக்கத்தில் உள்ளனர். உங்கள் இராசிக்கு 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான குரு, வக்கிர இயக்கத்தில் இருக்கும் பொழுது, எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மாற்று மருத்துவத்தால் உடல் நலம் சீராகும். அதே சமயம் தந்தைவழி உறவில் விரிசல் வரலாம். பூர்வீக சொத்துப் பிரச்சினை நீடிக்கும். சனியின் வக்கிர இயக்க காலத்தில், குடும்பம் ஒற்றுமையாக இருக்க விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள். எதையும் திட்டவட்டமாகச் செய்ய இயலாது. இந்த மாதம் சனிக்கிழமை தோறும் அனுமனை வழிபட்டால் சந்தோஷங்கள் அதிகரிக்கும்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் குருவும், சனியும் வக்கிர இயக்கத்தில் இருப்பதால், வரவும், செலவும் சமமாகவே இருக்கும். தனாதிபதி சூரியன் தனஸ்தானத்திலேயே இருப்பதால் காரியங்கள் கைகூடும். கடைசி நேரத்தில் பணத் தேவை பூர்த்தியாகும். கணவன் - மனைவிக்குள் அன்பும், ஆதரவும் கூடும். உடல்நலம் சீராகி உற்சாகத்தோடு செயற்படுவீர்கள். பிள்ளைகள் வழியில் சுபச் செய்திகள் வந்து சேரும். பணிபுரியும் இடத்தில் நல்ல பெயர் கிடைக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனச் சாட்சியைக் கொல்லக் கூடாது.
அது நமது நியாய அறிவின் நாடித்துடிப்பாகும்!.
- சாமுவேல் காலிரிட்ஜ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## புலம்பெயர் தமிழ் உறவுகளே! எங்கள் பலம் நீங்களே!

நாடு பொருளாதார நெருக்கடியால் கந்தறுந்து கிடக்கிறது.

உலக நாடுகள் மனிதாபிமான அடிப்படையில் சில உதவிகளை வழங்கி வருகின்ற போதிலும் அந்த உதவிகள் நீண்டு நிலைக்கும் என்று எதிர்பார்க்க முடியாது.

தவிர, இலங்கைக்குக் கடன் வழங்கிய நாடுகள் அந்தக் கடனை இலங்கை திருப்பித் தரும் என்ற நம்பிக்கையில் கொடுக்கவில்லை.

மாறாக, கொடுத்த கடனை அடிப்படையாகக் கொண்டு இலங்கைக்குள் நுழைந்து விடுகின்ற நோக்கத்தோடு கடன் வழங்கப்பட்டுள்ளது.

இதற்குச் சீனா நல்லதோர் உதாரணம்.

ஆம், இலங்கைக்குக் கடன் வழங்கிய சீனா தனது உளவு பார்க்கும் கப்பலை இங்கு கொண்டுவந்து, இலங்கை மீதான தனது உரிமையை நிலைநிறுத்தியுள்ளது.

இறைமையுள்ள ஒரு நாடு; இன்னொரு நாட்டின் வேவு பார்க்கும் கப்பல் தனது நாட்டுக்குள் வருவதைத் தடுக்க முடியாமல் தத்தளிக்கிறதெனும்போது, சீனா இலங்கைக்கு வழங்கிய கடன் எது சார்ந்ததென்பது அறிதற்குரியது.

இதேபோல, இந்தியாவின் உதவிகளும் கடன்களும் இலங்கையைத் தனது கட்டுப்பாட்டுக்குள்ளும் கண்காணிப்புக்குள்ளும் வைத்திருப்பதை மறைமுக நோக்கமாகக் கொண்டதென்பதும் தெரிந்ததே.

நிலைமை இதுவாக இருக்கையில், நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவதென்பது சாதாரணமான விடயமன்று.

எனவே பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதாக இருந்தால், முதலீடுகளும் அமெரிக்க டொலர்களும் தாராளமாகத் தேவைப்படும்.

இன்றிருக்கக்கூடிய சூழ்நிலையில் முதலீடுகளையும் வெளிநாட்டு நாணயங்களையும் வைத்திருக்கக்கூடியவர்களாகப் புலம்பெயர் ஈழத் தமிழர்களே உள்ளனர்.

இந்த நிலையில் புலம்பெயர் தமிழ் மக்களதும் அவர்கள் சார்ந்த புலம்பெயர் தமிழ் அமைப்புகளினதும் உதவிகளைப் பெற்றுக் கொள்வதே இலங்கைக்கு இருக்கக்கூடிய ஒரேயொரு வழியாகும்.

இதனை அடிப்படையாக வைத்தே புலம்பெயர் தமிழ் அமைப்புகளினதும் தனிநபர்களினதும் மீதான தடைகள் நீக்கப்பட்டுள்ளன.

இங்குதான் ஒரு விடயத்தை நாம் ஆணித்தரமாகக் கூறவேண்டிய தேவை ஏற்படுகிறது.

அதாவது ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை இன்று அவர்களுக்கு இருக்கக்கூடிய ஒரே பலம் புலம்பெயர் தமிழ் உறவுகளும் அவர்கள் சார்ந்த அமைப்புகளுமாகும்.

இந்தநிலையில், நம் புலம்பெயர் தமிழ் உறவுகள் மாயமான்களை நம்பினால் அதன் விளைவு மிக மோசமானதாக இருக்கும்.

உண்மை. நாடு இக்கேடு கெட்டிருக்கக் கூடிய நிலையிலும் தமிழர்களின் நிலங்களைப் படையினருக்காக அபகரிப்பதும் தமிழர் தாயகத்தில் பௌத்த விகாரைகளை அமைப்பதும் சட்டவிரோத குடியேற்றங்களைச் செய்வதுமான நயவஞ்சகத்தனங்கள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

ஆக, இன்னமும் திருந்தாத சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்கள்; உங்களிடம் விடுத்த கோரிக்கை தொடர்பில் நீங்கள் பல தடவைகள் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும் என்பது தான், நம் தாழ்மையான கோரிக்கை.

# ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட பத்துப் பேருக்குப் பிணை

(கொழும்பு)

ஜனாதிபதி செயலகத்திற்குள் முறையற்ற வகையில் பிரவேசித்த சம்பவம் தொடர்பில் நீதிமன்றில் ஆஜரான இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதம செயலாளர் ஜோசப் ஸ்டாலின், அருட்தந்தை ஜீவந்த பீரிஸ். துமிந்த நாகமுவ உள்ளிட்ட 10 சந்தேகநபர்களை பிணையில் விடுவிக்க கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது. சந்தேகநபர்களை தலா 5 இலட்சம் ரூபா பிணையில் விடுவிக்க கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே உத்தரவிட்டார்.

கொழும்பு வடக்கு குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் வழங்கப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் சந்தேகநபர்கள் நேற்று நீதிமன்றத்தில் ஆஜராகி பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

கடந்த ஜூலை 13 ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்திற்குள் அத்துமீறி நுழைந்து அங்கு ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்திய சம்பவத்தின் சந்தேக நபர்களாக இவர்கள் பெயரிடப்பட்டுள்ளதாக பொலிஸார் நீதிமன்றில் அறிவித்தனர்.

வழக்கை எதிர்வரும் 31 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுமாறு நீதவான் உத்தரவிட்டார். (நி)

## மனைவி நல வேட்புநாள் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - மனவள கலைமன்றத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5 மணி தொடக்கம் 7 மணி வரை யாழ். அறிவுத் திருக்கோவிலில் "மனைவி நல வேட்பு நாள்" நிகழ்வு அறிவுத் திருக்கோவிலின் தலைவர் பேராசிரியர் அருள்நிதி சி. முருகானந்தவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

அனைவரும் தங்கள் வாழ்க்கைத் துணையோடு குறித்த நிகழ்வில் பங்கு கொண்டு பயன்பெறலாம் என அறிவுத் திருக்கோவில் நிர்வாகம் அறிவித்துள்ளது. குறித்த நிகழ்வு தொடர்பில் மேலதிக தகவல்களைப் பெற 021 222 2772 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (நி)

## கட்டுப்பாடுகள் இன்றி அதிகரிக்கும் கொரோனா

### பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம்

(கொழும்பு)

நாட்டில் கொரோனாப் பரவல் எந்தக் கட்டுப்பாடும் இல்லாமல் சமூகத்தில் அடிமட்டத்திலிருந்து அதிகரித்துள்ளதாக பொதுச்சுகாதார பரிசோதகர்கள் ஒன்றியத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.

இருப்பினும் இந்தக் கொரோனா நிலைமை மற்றும் காய்ச்சல் பாதிப்புக்களை சுகாதார அமைச்சு மற்றும் அரசாங்கம் கருத்தில் கொள்ளவில்லை எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

தடுப்பூசித் திட்டத்தால் ஏற்பட்ட நோய் எதிர்ப்பு சக்தியால் கொரோனா நோய் ஓரளவு கட்டுக்குள் வந்தது. எனினும், எந்த நேரத்திலும் பேரழிவு நிலை உருவாகலாம்.

கிராமப் புறங்களில் கண்டறியப்பட்ட காய்ச்சல், பெரும்பாலும் கொரோனா பாதிப்புக்களாகவே அடையாளம் காணப்பட்டன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே, கொரோனா பரவல் எந்தக் கட்டுப்பாடும் இல்லாமல் சமூகத்தில் அடிமட்டத்திலிருந்து அதிகரித்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

## மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களுக்கு அமைச்சுப் பதவி வழங்கக் கூடாது

### பவ்ரல் அமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

புதிய அமைச்சரவை நியமிக்கும்போது ஊழல் மோசடி, செயற்திறமை மற்றும் சட்டத்தின் ஆட்சி போன்ற விடயங்களுக்கு முகம்கொடுக்க முடியுமானவர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.

அவ்வாறு இல்லாமல் அரசியல் இருப்பை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டால் ஒட்டுமொத்த நாடு அழிவுப்பாதைக்கு செல்வதை தடுக்க முடியாமல் போகும் என பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

புதிய அமைச்சரவை நியமனம் தொடர்பாக பவ்ரல் அமைப்பு ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கவுக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை தற்போது பாரிய பொருளாதார மற்றும் அரசியல் ஸ்திரமற்ற நிலைக்கு ஆளாகி இருப்பதனால், நாட்டை ஸ்திரமான நிலைக்கு கொண்டு செல்ல, அமைக்க இருக்கும் அமைச்சரவையின் நடவடிக்கைகள் மிகவும் தீர்மானமிக்கதாகும்.

மேலும்பல்வேறு ஊழல் மற்றும் தவறான நடத்தை குற்றச்சாட்டுக்கள் உடைய, மக்களின் அதிருப்திக்கு ஆளாகியவர்களுக்கு அமைச்சுப்பதவி வழங்கக் கூடாது.

அதேபோன்று பொருளாதாரத்தை முகாமைத்துவம் செய்ய முடியுமான, சர்வதேச நாடுகளின் நம்பிக்கை,ஆதரவை பெற்றுக்கொள்ள முடியுமான மற்றும் இலங்கை மக்களின் நம்பிக்கையை வெற்றிகொண்டுள்ளவர்களை அமைச்சுப்பதவிக்கு தெரிவு செய்து கொள்ள வேண்டும்.

அதேபோன்று நியமிக்கப்படும் அமைச்சு விடயதானங்கள் தொடர்பான அடிப்படை அறிவுஇருப்பவர்களையே குறித்த அமைச்சுக்களுக்கு நியமிக்க வேண்டும் என அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## கோட்டாவின் மீள் வருகை ரணிலுக்கு தலைவலியை ஏற்படுத்தும்

### இந்திய ஊடகம் செய்தி வெளியீடு

(கொழும்பு)

சீர் குலைந்துள்ள இலங்கையின் பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் கஷ்டமான பணியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே எதிர்கொண்டு ள்ளார்.

இந்தநிலையில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வருகை அவருக்கு தலைவலியை ஏற்படுத்தும் செயலாகவே இருக்கும் என்று இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் பிணை எடுப்பு நடந்து கொண்டிருக்கிறது.

இதற்கு சில காலங்கள் எடுக்கலாம்.

இதற்கு மத்தியில் இந்தியாவும் சீனாவும் வெவ்வேறு பக்கங்களில் இழுத்துக்கொண்டிருக்கின்றன.

இதனையெல்லாம் ரணில் விக்கிரமசிங்க சமாளித்துக்கொண்டிருக்கும் போது போதாக் குறைக்கு கோட்டாபயவும் நாடு திரும்புகிறார்.

கோட்டாபயவுக்காக ரணில் விக்கிரமசிங்க என்ன செய்தாலும் விமர்சிக்கப்படுவார்.

பொதுமக்களில் பெரும் பாலானோர் விக்கிரம சிங்கவை கோட்டாவின் மனிதராகவே கருதுகின்றனர்.

எனவே விக்கிரமசிங்க துக்கத்தை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். ஆனால் அவர் ஒரு புத்திசாலி அரசியல்வாதி மற்றும் இந்த தந்திரமான பிரச்சினையை துணிச்சலுடன் சமாளிப் பார் என்று இந்திய ஊடகம் குறிப்பிட்டுள்ளது. (நி)

## கோழி இறைச்சியின் விலையில் வீழ்ச்சி

(கொழும்பு)

கோழி இறைச்சியின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதுடன் சந்தையில் முட்டைக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் ஆர்.எம். ரத்நாயக்க தெரிவித்தார்.

முட்டைக்கான கட்டுப்பாட்டு விலையில் ஏற்பட்டுள்ள சிக்கல் காரணமாக முட்டை உற்பத்தி செய்யும் விவசாயிகள் கோழிகளை விற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக சந்தையில் ஒரு கிலோ கோழி இறைச்சியின் விலை 700 ரூபாவாக குறைவடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சந்தையில் முட்டையின் பல்வேறு விலைகள் காரணமாக, முட்டைக்கான கட்டுப்பாட்டு விலையை நிர்ணயித்து அரசாங்கம் அண்மையில் வர்த்தமானியை வெளியிட்டது.

இதற்கு முட்டை உற்பத்தியாளர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்ததையடுத்து, வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோவிடம் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் தாலிக்கொடி அறுப்பு வசமாக சிக்கிய இராணுவ வீரர்

(வவுனியா)

வவுனியாவில் தாலிக்கொடியை அறுத்து தப்பி சென்ற இராணுவ வீரர் ஒருவர் பொது மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.வவுனியா கனகராயன்குளம் பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண் ஒருவரின் கழுத்தில் இருந்த தாலிக்கொடியினை சிவில் உடையில் வந்த இராணுவ வீரர் என சந்தேகிகப்படும் ஒருவர் அறுத்து விட்டு அங்கிருந்து தப்பிச் சென்ற வேளையில் போக்குவரத்து பொலிஸாரின் உதவியுடன் விரைந்து செயற்பட்ட அப்பகுதி பொது மக்களால் துரத்திப் பிடிக்கப்பட்டுள்ளார்.இவ்வாறு பறித்துச் சென்றவர் சிவில் உடையில் நடமாடிய இராணுவவீரர் என்பது உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் பொதுமக்களால் கனகராயன்குளம் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணையை வவுனியா கனகராயன் குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-299)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 400 | 400 | 350 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 450 | 400 | 450 | 400 |
| தக்காளி | 250 | 180 | 200 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 300 | 240 |
| கோவா | 400 | 500 | 450 | 450 |
| கரட் | 320 | 360 | 380 | 400 |
| பூசணி | 120 | 100 | 120 | 120 |
| புடோல் | 140 | 120 | 120 | 200 |
| வாழைக்காய் | 160 | 170 | 140 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 200-450 | 450 |
| பெரிய வெங்காயம் | 200 | 200 | 180 | 200 |
| பாகற்காய் | 500 | 400 | 400 | 480 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 100 | 200 |
| கருணைக் கிழங்கு | 160 | 200 | 250 | 250 |
| பயற்றங்காய் | 300 | 140 | 120 | 120 |
| லீக்ஸ் | 300 | 250 | 270 | 300 |
| பீற்றூட் | 140 | 140 | 160 | 200 |
| கறிமிளகாய் | 800 | 700 | 600 | 800 |
| முருங்கைக்காய் | 400 | 350 | 400 | 400 |
| போஞ்சி | 420 | 400 | 400 | 400 |
| கத்தரிதம்புள்ள | 300 | 300 | --- | 340 |
| கீரை - 1 பிடி | 140 | 120 | 100 | 150 |
| தேசிக்காய் | 300 | 300 | 350 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 40-80 | 60-80 |
| இராசவள்ளி | 200 | 250 | 200 | 250 |
| வெங்காயப்பூ | 350 | 300 | 300 | 400 |
| முள்ளங்கி | 120 | 120 | 120 | 280 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 100 | 60 |
| வல்லாரை | 30 | 100 | 60 | 40 |
| ஈரப்பலா | 100 | 80 | 80 | 140 |

# மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய சங்காபிஷேக நிகழ்வு



(மன்னார்)

மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் மகா கும்பாபிஷேக பெருவிழா கடந்த மாதம் 6 ஆம் திகதி இடம்பெற்றதைத் தொடர்ந்து 48 நாட்கள் மண்டல அபிஷேகம் இடம்பெற்று நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை காலை சங்காபிஷேக நிகழ்வு வெகு விமரிசையாக இடம் பெற்றது.

திருக்கேதீஸ்வர ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ தியாகராஜா கருணானந்த குருக்கள் தலைமையில் தர்ம ஆதீன மடத்தின் இலங்கைக்கான முதல்வர் ஸ்ரீமத் மீனாட்சி சுந்தரம் தம்பிரான் முன்னிலையில் சங்காபிஷேக நிகழ்வு இடம் பெற்றது.

அதனைத் தொடர்ந்து திருக்கேதீஸ்வர தேனமுது கும்பாபிஷேக விசேட மலர் வெளியிட்டு வைக்கப்பட்டது.

கொழும்பு இந்துக் கல்லூரியின் ஓய்வு நிலை முதல்வர் நூலாசிரியர் தம்பிப்பிள்ளை முத்துக் குமார சுவாமி நூலை வெளியிட்டு வைக்க, தர்ம ஆதியின இலங்கைக்கான முதல்வர் ஸ்ரீமத் மீனாட்சி சுந்தரம் தம்பிரான் நூலை பெற்றுக் கொண்டார். (நி-285)

# அக்கராயன் மகா வித்தியாலயத்திற்கு அதிபரை நியமிக்குமாறு கோரி ஆர்ப்பாட்டம்



(முறிகண்டி)

கிளிநொச்சி அக்கராயன் மகா வித்தியாலத்திற்கு அதிபர் ஒருவரை நியமிக்கக் கோரி மாணவர்கள், பெற்றோர் இணைந்து போராட்டம் ஒன்றை நேற்று முன்னெடுத்தனர்.

கிளிநொச்சி தெற்கு வலயக்கல்வி பிரிவுக்குட்பட்ட அக்கராயன் மகா வித்தியாலயத்திற்கு, கடந்த 3 மாதங்களாக அதிபர் நியமிக்கப் படவில்லை.

பிரதி அதிபரும் ஓய்வு நிலையை அடைந்துள்ள நிலையில், மேலதிக சேவைக்காக இணைக்கப்பட்டுள்ளார்.

42 ஆசிரியர்களையும் 800 மாணவர்களையும் கொண்ட குறித்த தேசிய பாடசாலையின் நிர்வாக செயற்பாடுகளை முன்னெடுக்க முடியவில்லை.

இந்த நிலையில், நிரந்தரமாக அதிபர் ஒருவரை நியமித்து தருமாறும் கல்விசார் விடயங்களை தடையின்றி மேற்கொள்ள நடவடிக்கை விரைந்து எடுக்குமாறும் இப் போராட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. (நி-100)

# இராசிபலன்

25.08.2022
ஆவணி 09, வியாழக்கிழமை
திரயோதசி முற்பகல் 11.32 மணிவரை

பூசம் பிற்பகல் 5.58 மணிவரை
சுப நேரம் -7.35-9.05 மணிவரை
இராகு காலம் -1.35-3.05 மணிவரை

சந்திராஷ்டமம்-
மூலம்,பூராடம்
நல்லைக்கந்தன் தேர்

வளவன்

**மேஷம்** அழகு சாதனப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்; மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம்.

**ரிஷபம்** சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், உறவினர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர்,விடா முயற்சிக்கு இன்று பரிசு கிடைக்கும், போசன சுகமுண்டு.

**மிதுனம்** கடினமான வேலைகளைக் கூட நயமாகப் பேசி முடித்துக் கொள்வீர்கள், சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள்,திருமண முயற்சிகள் கைகூடும்.

**கடகம்** வழிபாட்டால் மகத்துவம் காணும் நாள், நண்பர்கள் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், உங்களைப்பற்றி விமர்சிப்பவர்களிடம் எதிர்த்து பேசாமல் இருப்பீர்கள்.

**சிம்மம்** குடும்பத்தினரை அனுசரித்து செல்வது நல்லது, ஒளிமயமான எதிர்காலத்திற்கு உறுதுணைபுரியும் நாள், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம்.

**கன்னி** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பொது வாழ்வில் கௌரவம் உயரும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், காரிய அனுகூலமுண்டு.

**துலாம்** கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும், உற்சாகத்துடன் பணி புரிவீர்கள், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், காரிய அனுகூலமுண்டு, விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, வீட்டு உபயோகப் பொருட்களை வாங்க முற்படுவீர்கள்.

**தனுசு** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, தொழிலில் கூடுதல் விழிப்புணர்வு அவசியம், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, முயற்சிகளில் சிறு தடங்கல் ஏற்படலாம்.

**மகரம்** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், மறக்க முடியாத இனிய சம்பவங்கள் இடம் பெறலாம், போசன சுகமுண்டு.

**கும்பம்** குடும்பத்தினரிடையே ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.

**மீனம்** திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பாராட்டும் புகழும் கூடும் நாள், வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், கற்பனை மிகுதியான நாள்.

நீ நினைத்தால் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3 இடங்களில்...

எல்பிடிய, உரகஸ்மன்ஹந்திய பகுதியில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

குறித்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் கடுவில பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரினால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவம் ஒன்று கடுவில பிரதேசத்தில் நேற்று பதிவாகியுள்ளது.

கம்பஹா, படபொத, குருச சந்தியில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவரே குறித்த துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம)

## 50 ரூபாய்க்கு...

காணப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் வெள்ளை முட்டையொன்றின் சில்லறை விலை 43 ரூபாயாகவும் சிவப்பு / பழுப்பு முட்டை ஒன்றின் சில்லறை விலை்யை 45 ரூபாயாகவும் அறிவித்து நுகர்வோர் விவகார அதிகாரசபையினால் வர்த்தமானி வெளியிடப்பட்டது.

முட்டை உற்பத்தி செலவை விட உற்பத்தியாளருக்கு 5 ரூபா இலாபம் கிடைக்கும் வகையில் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாக இது தொடர்பான விலையை அறிவித்த வர்த்தகத்துறை அமைச்சர்தெரிவித்தார்.

எனினும், கால்நடைத் தீவனத்தின் விலை உயர்ந்து வரும் நிலையில், அந்த விலைக்கு முட்டையை விற்க முடியாது எனக் கூறி, முட்டை உற்பத்தியாளர்கள் அந்த விலைக்கு உடன்படவில்லை.

இதன்படி முட்டை உற்பத்தியாளர் சங்கம் அண்மையில் பிரதமர் தினேஷ் குணவர்தனவை சந்தித்து இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் பேச்சுவார்த்தை நடத்தியது.

எனினும் நேற்றைய கலந்துரையாடலின் பின்னர் சந்தையில் ஒரு முட்டையை 50 ரூபாயிற்கு விற்பனை செய்வதற்கு இரு தரப்பினரும் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளனர். (ம)

## நல்லைக் கந்தனி...

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் இரதோற்சவம் இன்றாகும்.

அதிகாலை வசந்த மண்டப பூசை இடம்பெற்று காலை 7.00 மணியளவில் அலங்காரக் கந்தன் தேரில் ஆரோகணிப்பார். (ம)

## சர்வதேசத்துக்கு...

பயன்படுத்தப்போவதில்லை என சர்வதேசத்துக்கு இலங்கை வாக்குறுதி வழங்கியுள்ளது.

இவ்வாறான நிலையில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பயன்படுத்துவதால் சர்வதேசத்தின் ஒத்துழைப்புகளை இலங்கைக்குப் பெற முடியாதென ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக.நான் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சராக இருந்தபோது மேற்குறித்த வாக்குறுதியை சர்வதேசத்துக்கு வழங்கியிருந்தேன்.

இதனை ஏற்றுக்கொண்டு அப்போதிருந்த ஜனாதிபதி பாதுகாப்புத் தரப்பினருக்கு ஆலோசனைகளை வழங்கியிருந்ததாகவும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## சீனா தனது நிலை...

"கடன் மறுசீரமைப்பை மேற்கொள்ள வேண்டியதன் தேவைப்பாடு தொடர்பிலும் அனைத்துக் கடன் வழங்குனர்களும் கருத்துவேறுபாடுகளின்றி பொதுநிலைப்பாடொன்றை முன்வைக்கவேண்டியதன் அவசியம் குறித்தும் நாம் சீன அரசாங்கத்திற்கு அறிவித்திருக்கின்றோம்" என்று சர்வதேச ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இவ்விடயத்தில் சீனா மாறுபட்ட அணுகுமுறையொன்றைக் கையாள்வதாகச் சுட்டிக்காட்டியுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எனவே ஏனைய கடன் வழங்குனர்கள் சீனாவுடன் எவ்வாறானதொரு இணக்கப்பாட்டிற்கு வருவார்கள் என்பது கேள்விக்குரிய விடயமாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். (ம)

## உரமும் இல்லை...

துறை அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார். அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில், ஊடகவியலாளர் ஒருவரின் கேள்விக்கு பதிலளிக்கும் வகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், சீன உர நிறுவனத்துக்கு 6.9 மில்லியன் அமெரிக்க டொலர் செலுத்தப்பட்டுள்ளது.

எனினும், நாம் திருப்பியனுப்பிய சேதன உரத்துக்கு பதிலாக சீன நிறுவனம் வேறு உரம் எதனையும் வழங்க இதுவரை முன்வரவில்லை.

இது தொடர்பான நீதிமன்ற ரீதியான செயற்பாடுகள் இடம்பெற்றுவருகின்றன.

அத்துடன், அமைச்சின் மேலதிக செயலாளர் ஒருவர் தலைமையிலான குழுவினர் அந்நிறுவனத்துடன் தொடர்ந்தும் பேச்சுவார்த்தை நடத்திவருகின்றனர்.

செலுத்தப்பட்ட பணத்தை மீளப் பெறுவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும், அது பலனளிக்கவில்லை.

இரண்டாவது முயற்சியாக குறித்த நிறுவனத்திடம், திருப்பியனுப்பிய சேதன உரத்துக்குப் பதிலாக இரசாயன உரம் கோரப்பட்ட போதும் அதற்கு இணங்கவில்லை.

எமது தரத்துக்கு அமைய உரம் வழங்குவதில் சிக்கல் உள்ளது. அவற்றை சரியான தர மதிப்பீடுகளுக்கு உற்படுத்தக்கூடிய வசதிகள் எமது தர நிர்ணய நிறுவனத்திடமில்லை. நாட்டுக்கு இத்தகைய நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில், எமக்குரிய பெருந்தொகையான டொலரை வெளிநாட்டில் செயலற்ற வகையில் வைத்திருப்பது நாட்டுக்கு பாரிய நட்டம்.

இந்த விடயத்தில் இவற்றை தவிர என்னால் வேறு எந்த முயற்சிகளையும் செய்யமுடியாது. எனவே நீதிமன்றத்தின் ஊடாக இதற்கான தீர்வை எதிர்பார்த்து காத்திருக்கிறோம் என்றார். (ம)

## இலங்...

விக்கிரமசிங்க அவர்களின் தலைமையில் நேற்றுப்பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இலங்கை எதிர்கொண்டுள்ள நிதி நெருக்கடியின் தற்போதைய நிலைமை குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டது.

மேலும் நாளை 26 ஆம்திகதி வெள்ளிக்கிழமை இந்தக் கலந்துரையாடலில் மற்றொரு சுற்றுக் கலந்துரையாடலை நடத்துவதற்கும் எதிர்காலத்தில் மத்திய வங்கி அதிகாரிகளுடன் தொழில்நு[illegible] தொடர் பில் கலந்துரையாடு வதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சுவார்த்தைக் குழுவின் தலைவர் பீட்டர் புரூபர், பிரதித் தலைவர் ஒசைரோ கொசையிகோ, சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான நிரந்தரப் பிரதிநிதி டுபாகன்ஸ் மற்றும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியும் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான் சாகல ரத்நாயக்க. ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க உட்பட பலர் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர். (ம)

## அலங்கார கந்த...

வரலாற்றுச் சிறப்பு மிக்க யாழ். நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருந் திருவிழாவை முன்னிட்டுச் சப்பரத் திருவிழா நேற்றுப் புதன்கிழமை மாலை பல்லாயிரக்கணக்கான அடியவர்களின் பங்குபற்றுதலுடன் வெகுசிறப்பாக இடம் பெற்றது. (ம-33,104)

## அரிசிக்கு...

விவசாயத்துறை அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர்சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ம)


மஹஜன சம்பத
திகதி 2022/08/24
சீட்டிழுப்பு இலக்கம் 4857
Y 3 0 2 0 8 9

ஹந்தஹன HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2022.08.24
சீட்டிழுப்பு இலக்கம் 166
கடகம் 03 56 57 60 கடகம்

மெகா பவர்
திகதி 24/08/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1205
U 25 05 13 32 41

கொவிசெத
திகதி 2022.08.24
சீட்டிழுப்பு இலக்கம் 3099
B 36 44 49 65
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2022.08.24
சீட்டிழுப்பு இலக்கம் - 887
C 03 08 28 54

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 24/08/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1314
சிம்மம் 5 1 8 0 5 9

அத கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
சீட்டிழுப்பு இல: 1658
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி : 2022.08.24
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,273,480/-
23 54 60 70 I

சனிதா
புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.08.24
சீட்டிழுப்பு இல : 3993
ரூ. 3,054,120/-
05 22 54 60 N

ராசி
ரூ. 2,863,595.40
திகதி 2022-08-24
வெற்றி வாரம் 3544
16 20 43 62
வர்ணம் பச்சை
ரூ. 7,346,600/-

N 24 18 42 46 68
1008
பச்சை
2022.08.24 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 255,813,769/-
011-2 333 546-47
Web : www.dlb.lk

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1847
சீட்டிழுப்பு திகதி 2022-08-24
20 43 54 59 P
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 34,889,160/-
தொ. பே. : 0112 333 546/47
Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1832
நிறம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2022.08.24
தினம் புதன்கிழமை
D 05 36 37 76
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,204,400/-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
✓ ONLINE APPLICATIONS
✓ VISA APPOINTMENTS
✓ PASSPORT APPLICATION
✓ POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-4793)

VISA
• STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீட்டித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம். V2 TRAVELS
0777-068-777

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 097 3127

## ஓலைச்சுவடி சோதிடம்

ஓலைச்சுவடி மூலமாக காண்டம் வாசிக்கப்படும்.
இந்தியாவில் இருந்து ( வைத்தீஸ்வரன் கோவில் )
**அதிசூட்சும காண்டம்**
அனைத்து விதமான பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைக்கும்.
திருகோணமலை, மட்டக்களப்பில் உள்ளவர்களுக்கு வவுனியாவில் வாசிக்கப்படும்.
Call - 076 328 7119
WhatsApp - 077 630 6290
(12551)

## உடனடி வேலை வாய்ப்புக்கள்

EXECUTIVE OFFICER
✓ சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
✓ வயது-22 தொடக்கம் 35
✓ தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது) (C-4793)
V2 TRAVELS
AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்
49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம் 0777-068-777

## அறிவிப்பாளர்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இணையத்தள வானொலி ஒன்றுக்கு பகுதி நேர அறிவிப்பாளர்கள் தேவை.
யாழ். நகரை அண்மித்தவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.
வாட்ஸ்அப் மூலமாக உங்கள் விபரங்களை அனுப்பி வைக்கவும். (12557)
076 983 4989

## வீடு வாடகைக்கு

கிளிநொச்சி திருநகரில் மாவட்ட செயலகத்திற்கு அருகில் சிறிய குடும்பம் வசிக்கக்கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு (C-4785)
076 231 2403

## விற்பனைக்கு உண்டு

மோட்டார் சைக்கிள் உதிரிப் பாகங்கள் விற்பனைக் கடையில் உள்ள உதிரிப்பாகங்கள், தளபாடங்கள்மற்றும் கணினி என்பன விற்பனைக்கு உண்டு. (12558)
077 214 6148

## வேலையாட்கள் தேவை

மா வறுக்கின்ற நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.
ஆண், பெண் இருபாலாரும்.
சம்பளம் : 1,500/= இற்கு மேல் (C-4791)
077 936 1356

## Japan Cycle Bazar




**சைக்கிள் விற்பனைக்கு**
சுன்னாகம் சந்தியிலிருந்து 500M
ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்த சைக்கிள்களின் புதிய விலை 38000/=
விலைக்குறைப்பு
Contact No
076 414 0137, 077 416 3146
202, கந்தரோடை றோட், சுன்னாகம். (C-4789)

உ
ஓம் சக்தி



ஏழாலை
## ஸ்ரீ வசந்த நாகபூசனி அம்பாள் தேவஸ்தானம்
### மஹா கும்பாபிஷேகம்

எதிர்வரும் 28.08.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 8.30 மணிக்கு 4 அடி உயரமான ஐம்பொன்னாலான முருகனுக்கான மஹா கும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது.
முதல் நாள் சனிக்கிழமை காலை 8.30 - 11.30 மணிவரையும், மாலை 3.00 - 6.00 மணிவரையும் அடியவர்கள் பாற்காப்புச் சாத்த முடியும் என்பதனையும் அறியத் தருகின்றோம்.
(12509) தேவஸ்தானம்


# மரண அறிவித்தல்



அக்சயா பெசன்
பண்டாரிக்குளம், வவுனியா.

## திருமதி குமாரசாமி சாந்திமதி
### (சாந்தி)

**பிறப்பு:** 08.11.1963 **இறப்பு:** 22.08.2022

யாழ்.சாவகச்சேரி சரசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி திருநகர் மற்றும் வவுனியா பண்டாரிக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட எமது குடும்பத் தலைவி குமாரசாமி சாந்திமதி (சாந்தி) கடந்த 22.08.2022 திங்கட்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு - இரத்தினதேவி தம்பதிகளின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்றவர்களான நடராஜா வள்ளிப்பிள்ளை, செல்லம்மா அவர்களின் அன்பு மருமகளும் குமாரசாமியின் (கனடா) அன்பு மனைவியும் பரிமளகாந்தன், வளர்மதி, தேன்மதி, பஞ்சவர்ணன் (ஜேர்மனி), பஞ்சலிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் அகிலா, கேமா (கனடா), காலஞ்சென்ற ஜீவமகான், கலியுகன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் செந்தில்குமார், சதானந்தன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் திருவரங்கன், திவிசன், நிருசன், அக்சயா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் மனோகரன், குணரத்தினம் (குணம்), வாமதேவா (தேவன்), பாஸ்கரன், மைதினி, சுபாஜினி, மாலினி ஆகியோரின் பாசமிகு மைத்துனியுமார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.08.2022) வெள்ளிக்கிழமை சரசாலை வடக்கில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 11.00 மணியளவில் தகனக் கிரியைக்காக சரசாலை வடக்கு ஆலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
சரசாலை வடக்கு, சாவகச்சேரி.
077 444 2737, 077 887 3118
(C-4792)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.08.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.